# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | SC. 138/2013 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | அ.சா—42 (PW– 42) |
| பெயர் | :- | திரு.சுப்பைய்யா( புலனாய்வு அதிகாரி) |
| தேதி | :- | 26—06—2025 |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :-**

இந்த வழக்கை புலனாய்வு செய்ய எனக்கு காவல் துணை கண்காணிப்பாளரோ, காவல் கண்காணிப்பாளரோ எனக்கு எழுத்து மூலமான அதிகாரம் கொடுத்தனரா என்றால் இல்லை. இந்த வழக்கை நான் புலனாய்வு செய்வதற்கு உதவியாக இருக்க ஆண்டிமடம் காவல் நிலைய ஆய்வாளர் சீனு.ராஜேந்திரனுக்கோ ஜெயங்கொண்டம் காவல் நிலைய ஆய்வாளர் மகாதேவனுக்கோ காவல் கண்காணிப்பாளர் எழுத்து மூலம் ஆணையிட்டாரா என்றால் வாய்மொழியாக ஆணையிட்டார். மேற்சொன்ன இரு ஆய்வாளர்களும் இந்த வழக்கு சம்மந்தமாக தங்களை விசாரித்தனர் என்று என்னிடம் வாக்குமூலம் அளித்த சான்றாளர்கள் யாராவது வாக்குமூலத்தில் சொன்னார்களா என்றால் என்னிடம் சொல்லவில்லை என்று நினைக்கிறேன். சரியாக நினைவில்லை.

ஆண்டிமடம் காவல் ஆய்வாளரும் ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளரும் இந்த வழக்கின் சான்றாளர்கள் யாரையாவது விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. ஆண்டிமடம் காவல் ஆய்வாளரும் ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளரும் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் இந்த வழக்கில் உதவியாக இருப்பதற்கு அவர்களுக்கு காவல் கண்காணிப்பாளர் எழுத்துமூலம் ஆணையிட்டதாக கூறவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள சம்பவத்திற்கு சுமார் ஓராண்டிற்கு முன் தேசிங்குபாலன் என்பவர் கொலையுண்டார் என்றால் சரிதான். அவர் இறந்தபின் வங்குடி ஊரில் எங்கள் காவல் நிலையத்திலிருந்தும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் அலுவலகத்திலிருந்தும் அனுப்பப்பட்ட காவலர்கள் இந்த வழக்கின் புலன்விசாரணை முடியும்வரை பாதுகாப்பு பணியில் இருந்தார்கள் என்று சொன்னால் முழுவதும் சரியல்ல. தேசிங்குபாலன் 21.10.2007 ஆம் தேதியன்று இறந்தார். 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தொடர்ந்து அந்த ஊரில் காவலர்கள் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். அதன் பிறகு பாதுகாப்பு அகற்றப்பட்டது. நான் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அந்த காவல் நிலையத்திற்கு பொறுப்பேற்றேன். தேசிங்குபாலன் கொலையுண்ட ஊரை பார்வையிட்டு தேவைப்படும்போது காவலர்களை சுற்று காவலுக்கு அனுப்புவேன். வங்குடி ஊரில் எந்தெந்த காலகட்டத்தில் எப்போது சுற்று காவல் பணிக்கு காவலர்கள் சென்றார்கள் என்பதை காட்டும் ஆவணம் எதையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்தெந்த காவலர்கள் அவ்வாறு சுற்று காவலுக்கு சென்றார்கள் என்பது சம்மந்தமாக நான் சான்றாளர்கள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை.

இந்த வழக்கில் இறந்துபோன காசிநாதன் என்பவர்மீது மீன்சுருட்டி காவல் நிலையத்தில் கள்ளச்சாராய வழக்குக்கள் போடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். தேசிங்குபாலன் கொலை வழக்கில் இந்த வழக்கின் எதிரிகள் சான்றாளர்களாக உள்ளனர் என்றால் சரிதான். தேசிங்குபாலன் இறந்தபின் எதிரிகளோ அந்த ஊரை சேர்ந்தவர்களோ காசிநாதனின் வீட்டையும் காசிநாதனின் உறவினர்களின் வீட்டையும் அவர்களின் ஆடு மாடுகளையும் வயல்களையும் அடித்து சேதப்படுத்தியதாக எங்கள் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் நான் பொறுப்பேற்ற பிறகு அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை. அதற்குமுன் புகார் கொடுக்கப்பட்டதா என்று எனக்கு தெரியவில்லை. மேற்சொன்னபடி சம்பவம் நடந்ததாக இந்த வழக்கின் சான்றாளர்கள் யாரும் புலனாய்வின்போது என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள கொலை சம்பவம் இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளபடி நடக்கவில்லை என்றும் அந்த சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. கொலையுண்ட காசிநாதன் அந்த பகுதியில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்றார் என்றும் அதனால் அந்த பகுதியில் வசிப்பவர்கள் அதை தடுக்ககோரி எங்கள் காவல் நிலையத்தில் தொடர்ச்சியாக புகார் கொடுத்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. நாங்கள் நடவடிக்கை எடுக்காததால் ஊர் மக்கள் அனைவரும் 16.05.2008 ஆம் தேதியன்று காலை 8.00 மணியளவில் ஒன்றுகூடி கலவரம் செய்தபோது இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட அனைவரும் இறந்தனர் என்றும் அந்த கலவரம் 8.00 மணிக்கு ஆரம்பித்து 8.30 மணிக்கு முடிந்துவிட்டது என்றும் சொன்னால் சரியல்ல. அந்த

கலவரத்திற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. அந்த கலவரம் குறித்து வங்குடி கிராம நிருவாக அலுவலர் மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர் என்றும் அந்த தகவலின்பேரில் நானும் மீன்சுருட்டி காவல் நிலையத்தினரும் வங்குடி ஊருக்கு சென்றுவிட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. வங்குடி கிராம நிருவாக அலுவலர் தொலைபேசியில் சொன்ன தகவல்தான் இந்த வழக்கிற்கான முதல் தகவல் என்றும் அதை வெளிகாட்டினால் இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதை மறைத்து விட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

வழக்குச் சம்பவம் குறித்து நான் ஜெயங்கொண்டம் காவல் ஆய்வாளருக்கும் ஆண்டிமடம் காவல் நிலைய ஆய்வாளருக்கும் தொலைபேசி மூலம் தகவல் சொன்னேன் என்றால் சரிதான். நான் சொன்ன தகவலின்பேரில் மேற்சொன்ன இரு காவல் நிலையத்தின் காவல் ஆய்வாளர்களும் 16.05.2008 ஆம் தேதியன்று காலை 10.00 மணிக்கு வங்குடி ஊருக்கு வந்துவிட்டனர் என்றால் சரியல்ல.

5 நபர்கள் கொலை செய்யப்பட்ட வழக்கு என்பதால் அதை விசாரிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்று காவல் துணை கண்காணிப்பாளருக்கோ காவல் கண்காணிப்பாளருக்கோ நான் எழுத்து மூலம் தகவல் சொன்னேனா என்றால் எழுத்து மூலம் தெரிவிக்கவில்லை. இந்த வழக்கை விசாரிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றும் அதனால் நான் புலனாய்வு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. தனிப்படை அமைக்க காவல் ஆய்வளருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான். தனிப்படை அமைக்க எனக்கு அதிகாரம் இல்லாத நிலையில் தனிப்படை அமைத்து நான் விசாரித்ததாக

சொல்வது பொய் என்றும் அவ்வாறு தனிப்படை விசாரணை எதுவும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சம்பவ இடத்திற்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளரும் துணை காவல் கண்காணிப்பாளரும் எப்போது வந்தனர் என்றால் எனக்கு தற்போது நினைவில்லை. அவர்கள் இருவருக்கும் கம்பி இல்லா தந்தி மூலம் தகவல் தெரிவித்தேன் என்றால் சரிதான். 16.05.2008 ஆம் தேதியன்று வான்தந்தி மூலம் தகவல் சொன்னேன். நேரம் எனக்கு நினைவில்லை. சம்பவ இடத்தை நிழற்படம் எடுத்தவருக்கு காவல் நிலையத்திலிருந்து பணம் கொடுத்து ரசீது பெற்றேனா என்றால் அது பற்றி தற்போது எனக்கு நினைவில்லை. சம்பவ இடத்தை நிழற்படம் எடுத்ததாக பொய் ஆவணம் புனைந்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் எதிரிகளின் கைரேகை உள்ளதா என்று அறிய வல்லுநர் ஆய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். மற்ற ஆய்விற்கு அனுப்பப்பட்டது. அந்த ஆயுதங்களில் எதிரிகளின் கைரேகை இல்லை என்று எனக்கு தெரியும் என்றும் அதை கைரேகை ஆய்விற்கு அனுப்பினால் எதிரிகளுக்கும் அந்த ஆயுதங்களுக்கும் சம்மந்தம் இல்லை என்று தெரியவந்துவிடும் என்பதால் அதை அனுப்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

எதிரிகள் யாரையும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றும் எதிரிகள் யாரும் தன்னிச்சையாக ஒப்புதலுரை எதுவும் அளிக்கவில்லை என்றும் எதிரிகள் யாரும் வழக்குச் சொத்துக்கள் எதையும் எடுத்து ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஒப்புதலுரைகளும் வழக்குச் சொத்துக்களும் இந்த வழக்கிற்காக புனையப்

பட்டவை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர்களில் எதிரிகள் யாரும் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான்.

16.05.2008 ஆம் தேதியன்று காலை 11.00 மணியளவில் வங்குடி ஊரை சேர்ந்த சுமார் 100 ஆட்களை மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு நாங்கள் அழைத்துச் சென்றோம் என்றால் இல்லை. அவர்களில் இந்த வழக்கின் எதிரிகளான 2 ஆம் எதிரி திருஞானம், 5 ஆம் எதிரி தினேஷ், 3 ஆம் எதிரி பழனிசாமி, 6 ஆம் எதிரி ரமேஷ் ஆகியோரும் இருந்தனர் என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் 9 ஆம் எதிரி சசிகலா, 10 ஆம் எதிரி கனகவள்ளி ஆகிய இருவரையும் கைதுசெய்த ஜெயங்கொண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய உதவி காவல் ஆய்வாளர் திருமதி.கவிதாவை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. காவல் உதவி ஆய்வாளர் கவிதா மேற்சொன்ன இரு பெண் எதிரிகளை கைது செய்ய-வில்லை என்றும் நான்தான் சட்டத்திற்கு புறம்பாக கைது செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. சான்றாளர்கள் ஜானகி(அ.சா-15), ஜெயக்கொடி (ப.சா-25), காசியம்மாள்(ப.சா-26) ஆகியோர் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் 15-ஆம் எதிரி ஸ்ரீதர், 14-ஆம் எதிரி காளிதாஸ், 16 -ஆம் எதிரி ஜவகர்பாபு, 17 -ஆம் எதிரி விஜய், 18-ஆம் எதிரி சுரேஷ் ஆகியோர் சேர்க்கப்பட்டனர் என்றால் சரிதான். ஜானகி, ஜெயக்கொடி, காசியம்மாள் ஆகியோரை தவிர வேறு எந்த சான்றாளர்களும் 14 முதல் 18 வரையிலான எதிரிகள் குறித்து எதுவும் கூறவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் ஜானகி(அ.சா-15) ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் சொன்ன வாக்குமூலத்தில் தன்னை 35 நபர்கள் தன்னுடைய வீட்டில் வைத்து தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தெரிந்த நபர்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஜானகி அளித்த வாக்குமூலத்தில் 35 நபர்கள் யார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த 35 நபர்கள் யார் என்று நான் விசாரித்து கண்டுபிடித்தேனா என்றால் இல்லை. ஜானகியின் வீடு உள்ள இடத்தை தனியாக பார்வையிட்டு மகசரும் மாதிரி வரைபடமும் தயாரித்தேனா என்றால் இல்லை. ஒட்டுமொத்தமாகத்தான் தயாரித்தேன். இந்த வழக்கில் உள்ள பார்வை மகசரிலோ மாதிரி வரைபடத்திலோ ஜானகியின் வீடு பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 16.05.2008 ஆம் தேதியன்று கலவரம் நடந்ததால்தான் ஜானகியால் 35 நபர்கள் யார் யார் என்று சொல்லமுடியவில்லை என்றும் அதனால்தான் நானும் அது குறித்து தனியாக விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

நிகழ்நிலை புகார்தாரர் ராஜலிங்கம் 16.05.2008 ஆம் தேதியன்று மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு காலை 11.30 மணிக்கு வரவில்லை என்றும் நான் சொல்வதுபோல் எழுத்து மூலமாக புகார் எதுவும் கொடுக்க-வில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அன்று காலை 10.00 மணிக்கு நான் சம்பவ இடத்திற்கு சென்று அங்கிருந்து அண்ணாமலை பல்கலைகழகத்தில் படித்துக்கொண்டிருந்த ராஜலிங்கத்திற்கு தகவல் சொல்லி வரவழைத்து அவரும் நானும் கலந்து ஆலோசித்து தேசிங்குபாலன் கொலை வழக்கில் சான்றாளராக இருந்த எதிரிகளை வழக்குச் சம்பவத்தில் ஈடுபடுத்தி பொய்யாக புகார் புனைந்து வழக்குப் பதிவுசெய்தோம் என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் காயமுற்றவர்களை காவல் துறை வாகனத்தின் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக சான்றுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆண்டிமடம், ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தை சேர்ந்தவர்களோ மாவட்ட காவல் துறையை சேர்ந்தவர்களோ காயமுற்ற-வர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக சான்றாளர்கள் யாரும் என்னிடம் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

காயமுற்ற ஜானகியை மாவட்ட காவல் அலுவலகத்தின் அலுவலர்கள் காவல் வாகனத்தில் மருத்துவமனைக்கு காலை 10.00 மணிக்கு அழைத்துச் சென்றனர் என்றும் அது எனக்கு தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த சங்கதியை ஒப்புக்கொண்டால் இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் எனக்கு தெரியாது என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு அழைத்துச்சென்ற காவலர்களை விசாரித்தால் இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் நான் அதை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகசரிலும் மாதிரி வரைபடத்திலும் சடலங்கள் கிடந்த பகுதியில் எந்தெந்த இடத்தில் இரத்தம் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் இரத்தம் இருந்ததாக சொல்லியுள்ளேன்.

சான்றாளர் முருகானந்தம்(அ.சா-19) புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் "கொஞ்சநேரத்தில் மீன்சுருட்டி Police வந்தது. ஒரு Police man சரோஜா, நரசிங்கபாளையம் சேகர் ஆகியோருடன் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு ஜானகியை Car இல் அனுப்பி வைத்தார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த காவலர் யார் என்று நான் குறிப்பிட்டு விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். சரோஜா

என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் ஜானகியை அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

நிகழ்நிலை புகார்தாரர் ராஜலிங்கம் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் அவரும் அவருடைய உறவினர்களும் ஒரு பக்கமாக இருந்தும் தேசிங்குபாலன் ஒரு பக்கமாக இருந்தும் இரு தரப்பினருக்கும் நிலப்பிரச்சனை இருந்துவந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த நிலப்பிரச்சனை காரணமாக ராஜலிங்கம் குடும்பத்தினரை தேசிங்குபாலன் சொன்னதாக ராஜலிங்கம் வாக்குமூலம் அளித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். அது தொடர்பாக ஊரில் பஞ்சாயத்து கூட்டியதாக ராஜலிங்கம் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜலிங்கத்திற்கும் தேசிங்குபாலனுக்கும் சண்டை ஏற்பட்டு ராஜலிங்கம் வகையறாவிற்கு வெட்டுக்காயம் ஏற்பட்டதாக ராஜலிங்கம் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பிரச்சனையில்தான் தேசிங்குபாலன் இறந்துபோனார். ராஜலிங்கம் தேசிங்குபாலன் கொலை வழக்கில் சிறைக்கு சென்றுவிட்டு வெளியே வந்தபோது அவருடைய மற்றும் அவருடைய சகாக்களின் வீடுகள் அவர்களுக்கு சொந்தமான 20 மாடுகள், 10 இலட்சம் உரூபாய் மதிப்பிலான ஆழ்துளை கிணறு உள்ளிட்டவற்றை நாசப்படுத்தியதாக ராஜலிங்கம் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமாக ராஜலிங்கமோ அவருடைய சகாக்களோ காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ராஜலிங்கம் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் எதிரிகள் பாரதிதாசன், திருஞானம், காளிதாசன், ரவிச்சந்திரன், பழனிசாமி, தினேஷ், ஜவகர்பாபு, பாஸ்கரன், சிலம்பரசன்,

திருவாளப்புத்தூர் ரமேஷ், விஜய், சுரேஷ், கனகவள்ளி, சசிகலா ஆகியோர் அடிக்கடி கூடி எங்கள் குடும்பத்தை அழிப்பது சம்மந்தமாக பேசினார்கள் என்று சொல்லவில்லை என்றால் இல்லை என்றால் முந்தைய சதிதிட்டம் சம்மந்தமாக எதையும் கூறவில்லை. சம்பவத்தின்போது நடந்ததைதான் சொல்லியுள்ளார். ராஜலிங்கம் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் பாலுசாமி மற்றும் சின்னதுரை ஆகியோரின் வீடுகளுக்கு இடைப்பட்ட பகுதியில் எதிரிகள் ஜவகர்பாபு, விஜய், ஸ்ரீதர், காளிதாசன் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எதிரிகள் திருஞானமும் ரவிசந்திரனும் காசிநாதன் குடும்பத்தில் ஒருவரையும் உயிரோடு விட்டுவிடாதீர்கள் என்றும் அனைவரையும் வெட்டி தள்ளுங்கள் என்றும் சொன்னதாகவும் அதை கேட்டதும் எதிரிகள் அவர்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தார்கள் என்றும் சொல்லியுள்ளரா என்றால் இல்லை. யாரையும் விடாதீர்கள் என்று சொன்னதாக சொல்லியுள்ளார். அவ்வாறு அவர் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

ராஜலிங்கம் புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் எதிரி ரவிசந்திரன் சுரேசின் வயிற்று பகுதி, முகத்தின் வலது புறம் ஆகியவற்றில் சராமாரியாக வெட்டினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எதிரி திருஞானம் சுரேசின் கழுத்து பகுதியில் ஏறக்குறைய 3 முறை வெட்டினார் என்றும் முதுகு பக்கத்திலும் வெட்டினார் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எதிரி பழனிசாமி பிரபுவின் முழங்கால் மற்றும் தொடை பகுதியில் வெட்டியாதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எதிரி பழனிசாமி கண் இமைக்கும் நேரத்தில்

பிரபுவின் கழுத்தை வெட்டி தலையை தனியாக வெட்டி கால்பந்து உதைப்பதுபோல் உதைத்து தள்ளிக்கொண்டு சென்றார் என்று சொல்ல-வில்லை என்றால் சரியல்ல. அதுபோன்று பொருள்பட சொல்லியுள்ளார். அதுபோல் அதை பார்த்து நானும் என் தம்பிகளும் கூக்குரலிட்டு ஓடினோம் என்றும் அப்போது என் அப்பா, அம்மா, அண்ணன் தர்மலிங்கம் ஆகியோர் எதிர் திசையிலிருந்து எங்களை நோக்கி ஓடிவந்தார்கள் என்று சொல்ல-வில்லை என்றால் சரிதான். அது சம்மந்தமான சாரம்சம் உள்ளது. அதுபோல் என் தாயார் ஜானகி என் மகன்கள் யாரையும் வெட்டிவிடாதீர்கள் என்று கூச்சலிட்டு கொண்டு ஓடியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எங்கள் அம்மாவை தள்ளிவிட்டுவிட்டு எதிரி தினேஷ் என் தம்பி மகாலிங்கத்தின் கைகள், வயிறு, முதுகு, மூக்கு, முகம் போன்ற இடங்களில் சரமாரியாக வெட்டினார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எதிரி சிலம்பரசன் தான் வைத்திருந்த பட்டா கத்தியால் எனது தந்தையின் வயிறு, மார்பு, விலா போன்ற இடங்களில் பலமுறை வெட்டினார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சிலம்பரசன் பட்டா கத்தியால் தந்தையின் இடது விலா, முகம், இடது கன்னம் ஆகியவற்றில் வெட்டியதாக உள்ளது. அதேபோல் அதே நேரத்தில் எதிரிகள் ஜவகர்பாபு, காளிதாசன், சுரேஷ், விஜய், ஸ்ரீதர் ஆகியோர் எனது அண்ணன் தர்மலிங்கத்தை சுற்றி வளைத்து அவர் எங்கும் போகமுடியாதபடி மறித்து விட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தை எட்டி உதைத்ததில் நிலைதடுமாறிய தர்மலிங்கத்தை எதிரி பாஸ்கரன் காலில் வெட்டினார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலை முதல் பாதம்வரையிலான உறுப்புகளில் சரமாரியாக

வெட்டினார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் கீழே விழுந்த தர்மலிங்கத்தின் மார்பில் எதிரி காளிதாசன் உட்கார்ந்து-கொண்டார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் தர்மலிங்கத்தின் தலையை சக்திவேலின் மகன் ரமேஷ் காலால் உதைத்து தள்ளிக்கொண்டு சென்றார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் என் அம்மா தர்மலிங்கத்தின்மீது விழுந்து அழுதுகொண்டிருந்தார் என்றும் அப்போது எதிரி காளிதாசன் என் அம்மாவை எட்டி உதைத்தார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி தினேஷ் என் அம்மாவின் உயிர்நிலை பகுதியில் காலால் மிதித்து உன் குடும்பத்தில் அனைவரையும் சாய்த்து விட்டோமடி என்றும் இதோடு ஒழிந்து போங்கள் என்றும் சொன்னதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி பழனிசாமி பிரபுவின் தலையை உதைத்து சென்று தேசிங்குபாலன் இறந்துபோன இடமான சக்திவேலின் மகன் ரமேஷ் வீட்டிற்கு எதிர்புறமுள்ள இடத்தில் வைத்தார் என்று குறிப்பாக சொல்லியுள்ளரா என்றால் இல்லை. அதேபோல் ராஜலிங்கத்தை நாங்கள் காவல் வாகனத்தில் அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றதாகவும் நான்தான் இறந்தவர்களின் உடலை ஆய்வாளருக்கு அடையாளம் காட்டியதாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மண் மாதிரிகளை எடுத்தபோது நான்உடன் இருந்தேன் என்று குறிப்பாக சொல்ல-வில்லை என்றால் சரிதான். அதுபோல் தர்மலிங்கத்தை எதிரிகள் ஸ்ரீதர், ஜவகர்பாபு, விஜய், சுரேஷ், காளிதாசன் ஆகியோர் சுற்றி வளைத்துக்-கொண்டார்கள் என்றும் நான் தப்பித்துக்கொள்வதற்காக சற்று தூரத்தில் நின்றுகொண்டேன் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதையும் சான்றாளர்களிடம் யாரிடமாவது காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் சான்றாளர்களாக உள்ள மருத்துவர்களிடம் வழக்குச் சொத்துக்களை காட்டி விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அதற்காக தனியாக பதிவு எதுவும் செய்யவில்லை. மருத்துவர்களின் வாக்குமூலத்தில் நான் சொல்வதுபோல் சொல்லவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடத்திலிருந்து இறந்துபோனவர்களின் கைபேசியையோ செருப்பையோ மற்றும் சான்றாளர்களின் கைபேசியையோ செருப்பையோ கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

ஜெயந்தி புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் ராஜலிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் சம்பவம் நடந்த அன்று வீட்டில் இருந்ததாகவோ அவர்கள் குளத்துக்கு சென்று குளித்துவிட்டு வந்ததாகவோ ஊரில் இருந்ததாகவோ கூறவில்லை என்றால் குளித்துவிட்டு வீட்டிற்கு வந்தார்கள் என்று சொல்லியுள்ளார். அதேபோல் சம்பவ சமயத்தில் அவருக்கு குழந்தை பிறந்து வீட்டில் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் அன்று வண்ணாங்குளத்திற்கு அருகிலுள்ள இடத்திற்கு அவர் இயற்கை உபாதைக்காக சென்றுவிட்டு வந்ததாகவோ அப்போது இந்த இறந்ததுபோனவர்கள் எதிரில் வந்ததாகவோ அப்போது பாலுசாமி என்பவர் வீட்டிற்கு அருகில் எதிரிகள் திருஞானம், ரவிசந்திரன், பாரதிதாசன், ரமேஷ், சுரேஷ், பிரபாகரன், பழனிசாமி, தினேஷ், ராஜதுரை ஆகியோர்கள் பதுங்கி இருந்தார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் ஜெகதீஸ்வரன் புலனாய்வின்போது அளித்த வாக்கு-மூலத்தில் சத்தம் கேட்டு நான் எனது வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தேன் என்றும் அவ்வாறு பார்த்தபோது ராஜலிங்கத்தை எதிரிகள் சிலம்பரசன், திருவாழப்புத்தூர் ரமேஷ், திருஞானம், தினேஷ், பாஸ்கரன், காளிதாசன் ஆகியோர் கும்பலாக துரத்திக்கொண்டு வந்தார்கள் என்றும் கையில் வீச்சறுவாள், பட்டாகத்தி ஆகியவற்றை வைத்திருந்தார்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசிநாதனின் மகன் தர்மலிங்கத்தை சக்திவேல் மகன் ரமேஷ் பட்டா கத்தியால் வெட்டினார் என்றும் எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தின் மார்பில் உட்கார்ந்து கொண்டார் என்றும் எதிரி பாஸ்கரன் தர்மலிங்கத்தின் காலில் வெட்டினார் என்றும் சக்திவேல் மகன் ரமேஷ் தர்மலிங்கத்தின் தலையை தனியாக துண்டித்து அதை எடுத்துச்சென்று காளியம்மன் கோவில் சூலாயுதத்தில் குத்தி வைத்தார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் அந்த சமயத்தில் தர்மலிங்கத்தின் அப்பா காசிநாதன் அங்கு வந்து எதிரிகளை பார்த்து தனது மகன்களை விட்டுவிடுமாறு கையெடுத்து கும்பிட்டார் என்றும் எதிரிகள் காசிநாதனின் விலா பக்கத்திலும் கன்னத்திலும் வெட்டினார்கள் என்றும் காசிநாதனின் பின்பக்கத்தில் வெட்டினார்கள் என்றும் அதனால் காசிநாதன் சரிந்து கீழே விழுந்துவிட்டார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் திருவாழப்புத்தூர் ரமேஷ் ஜானகியின் தலையில் வெட்டினார் என்றும் எதிரி தினேஷ் ஜானகியின் மார்பு பகுதியில் வீச்சறுவாளால் வெட்டிவிட்டார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரிகள் விஜய், ஜவகர்பாபு, ஸ்ரீதர், சுரேஷ் ஆகியோர் இறந்த நபர்கள் தப்பித்துவிடக் கூடாது என்பதற்காக அவர்களை சுற்றி வளைத்துக்கொண்டார்கள் என்று

குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் பிரகாஷ் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் இறந்துபோன பிரபு எனது உடன் பிறந்த மூத்த சகோதரர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரிகள் எனக்கு தூரத்து உறவினர் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் கடந்த 16.05.2008 ஆம் தேதியன்று காலை 10.00 மணிக்கு மேல் நான், மதியழகன், ஜோதி ஆகிய மூவரும் மதியழகன் வீட்டு வாசலில் நின்று பேசிக்கொண்-டிருந்தோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சத்தம் கேட்டு நான் பார்த்தபோது ராஜலிங்கம், அமிர்தலிங்கம், தர்மலிங்கத்தின் மனைவி ஜெயந்தி, மகாலிங்கம் ஆகியோர் கூடியிருந்தார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் ராஜலிங்கம், அமிர்தலிங்கம், தர்மலிங்கத்தின் மனைவி ஜெயந்தி, மகாலிங்கம் ஆகியோரை துரத்திக்கொண்டு எதிரிகள் ராஜதுரை, தினேஷ், திருவாழப் புத்தூர் ரமேஷ், சக்திவேல் மகன் ரமேஷ், சிலம்பரசன், பாஸ்கரன், சசிகலா, கனகவள்ளி ஆகியோர் வந்தார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதுபோல் எதிரி தினேஷ் கையில் வீச்சறுவாள் வைத்திருந்தார் என்றும் எதிரிகள் ராஜதுரை, திருவாழப்புத்தூர் ரமேஷ், சக்திவேல் மகன் ரமேஷ், சிலம்பரசன், பாஸ்கரன் கைகளில் பட்டா கத்தி வைத்திருந்தார்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி ராஜதுரை மகாலிங்கத்தை கழுத்தில் பட்டா கத்தியால் ஒரே வெட்டாக வெட்டிவிட்டார் என்றும் எதிரி தினேஷ் மகாலிங்கத்தை வலது தோள்பட்டை, கன்னம் ஆகிய உறுப்புகளில் வெட்டிவிட்டார் என்றும் சத்தம் கேட்டு தர்மலிங்கம் ஓடிவந்தார் என்றும் சக்திவேல் மகன் ரமேஷ் என்பவர்

பட்டா கத்தியால் தர்மலிங்கத்தின் வயிறு, மார்பு, இடது புஜம், வலது தோள்பட்டை, பின் கழுத்து, வலது கீழ்பக்க தாடை ஆகிய உறுப்புகளில் வெட்டினார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி பாஸ்கரன் தர்மலிங்கத்தின் இடது காலை பட்டா கத்தியால் வெட்டினார் என்றும் எதிரிகள் காளிதாசன், ஸ்ரீதர், ஜவகர்பாபு, விஜய், சுரேஷ் ஆகியோர் தர்மலிங்கத்தை சுற்றி வளைத்துவிட்டார்கள் என்றும் எதிரி பாஸ்கரன் வெட்டியதில் தர்மலிங்கம் தடுமாறிய நேரத்தில் எதிரி காளிதாசன் தர்மலிங்கத்தின் மார்பில் உதைத்தார் என்றும் அதில் கீழே விழுந்த தர்மலிங்கத்தின் மார்பில் எதிரி காளிதாசன் ஏறி உட்கார்ந்து கொண்டார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி தினேஷ் கீழே விழுந்த ஜானகியின் பிறப்பு உறுப்பை மிதித்துக்கொண்டு அவரது மார்பிலும் வயிற்றிலும் வெட்டி முடியை அறுத்துவிட்டார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் இவை அனைத்திற்கும் காரணம் எதிரி பாரதிதாசன்தான் என்றும் அவர்தான் திட்டம்போட்டு கொடுத்தார் என்றும் ராஜலிங்கத்தின் குடும்பத்தை காலி செய்ய அவர்தான் திட்டம் போட்டுக்கொடுத்தார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சம்பவத்திற்கு பின்னர் ராஜலிங்கமும் அமிர்தலிங்கமும் என்னிடம் பிரபுவை பக்கத்திலுள்ள இடத்தில் வைத்து எதிரிகள் பழனிசாமியும் பிரபாகரனும் பட்டா கத்தியால் வெட்டியதாகவும் சுரேசை எதிரி ரவிசந்திரன் வீச்சறுவாளாலும் எதிரி திருஞானம் பட்டா கத்தியாலும் வெட்டியதாக சொன்னார்கள் என்றும் ராஜலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக சொல்லிவிட்டு சென்றார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசிநாதன் வெட்டுபட்டதை நான் நேரடியாக

பார்த்தேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசிநாதன் வெட்டப்பட்டு கிடந்தார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் அவர் சொன்ன வாக்குமூலத்தில் **பாரிவள்ளல் மகன் பிரபு என்றுதான் சொல்லியுள்ளார் என்றும் என்னுடைய சகோதரன் பிரபு என்று சொல்லவில்லை** என்றும் சொன்னால் சரிதான்.

சான்றாளர் ஜோதிவேல் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் நான் மதியழகன் வீட்டிற்கு சென்றிருந்தேன் என்றும் அங்கு வைத்து நான் மதியழகன், பிரகாஷ் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம் என்றும் மதியழகன் வீட்டிற்கு எதிர்புறம் 10 அடி தூரம் கிழபுறமாக பூராசாமி பெட்டிக்கடை இருக்கிறது என்றும் அப்போது கிழக்கே இருந்து ராஜலிங்கம், மகாலிங்கம், காசிநாதனின் மற்றொரு மகன் ஓடிவந்தார்கள் என்றும் மேற்கே இருந்து சக்திவேல் மகன் ரமேஷ், திருஞானம், ராமசந்திரன் மகன் ரமேஷ், ராஜதுரை மற்றும் நிறைய பேர் வந்தார்கள் என்றும் எதிரிகள் கைகளில் அறுவாள்கள் வைத்திருந்தார்கள் என்றும் கிராம மக்கள் சொன்னதன்பேரில் நான் சென்று பார்த்தபோது எதிரி பாஸ்கரன் வீட்டிற்கு எதிர்புறம் சுரேஷ் வெட்டப்பட்டு கிடந்தார் என்றும் சுரேசின் உடல் வாய்க்காலில் கிடந்தது என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

சான்றாளர் கோபி புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் இறந்துபோனவர்கள் பங்காளிகள் என்றும் எதிரிகள் உறவினர்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி ராஜதுரை என்பவர் பட்டா கத்தியால் மகாலிங்கத்தின் கழுத்தில் வெட்டியதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி தினேஷ்

வீச்சறுவாளால் மகாலிங்கத்தின் வலது கன்னத்திலும் வலது தோள் பட்டையிலும் வெட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் வலது பக்கமாக திரும்பி பார்த்தபோது பூராசாமி கடைக்கு அருகில் காசிநாதன், தர்மலிங்கம், ஜானகி ஆகியோர் வெட்டுப்பட்டு கிடந்தார்கள் என்றும் அதில் ஜானகி மட்டும் அதிஷ்டவசமாக பிழைத்துக்-கொண்டார் என்றும் அதன்பின்னிட்டு சுரேஷ், பிரபு ஆகியோர் கொலை செய்யப்பட்டதாக ஊர்காரர்கள் சொல்ல தெரிந்துகொண்டேன் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சம்பவத்தின்-போது நானும் அருகில் இருந்தவர்களும் எதுவும் செய்ய வேண்டாம் என்று சத்தம் போட்டோம் என்றும் எதிரிகள் அதை பொருட்படுத்தவில்லை என்றும் அங்கு இருந்த எதிரிகள் அனைவரும் எடுத்த சபதத்தை முடித்துவிட்டதாக ஒருசேர கத்தியதாகவும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சம்பவத்தின்போது அவர் முதுநிலை மருந்தாக்கவியல் இரண்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்ததாக சொல்ல-வில்லை என்றால் சரிதான். **அவர் கூலி வேலை செய்ததாக சொல்லி-யுள்ளார் என்றால் சரிதான்.** அதேபோல் எதிரிகள் ராஜதுரை, தினேஷ் ஆகியோரை தவிர வேறு எதிரிகள் யாரையும் நான் சம்பவத்தின்போது பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் செல்வம் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் எதிரிகளும் இறந்துபோனவர்களும் பங்காளிகள் என்றும் மாமன் மைத்துனர்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் 16.05.2008 ஆம் தேதியன்று காலை 10.00 மணியளவில் தண்ணீர் பிடிப்பதற்காக தான் சென்றதாகவும் தேவகுமாரியின் வீட்டிற்கு

வெளியே அமைக்கப்பட்டுள்ள பொது குழாய்க்கு சென்றேன் என்றும் அங்கு சரோஜா, நடராஜன், கோபி, செல்லத்துரை மனைவி மஞ்சுளா ஆகியோர் தண்ணீர் பிடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் மகாலிங்கத்தை பார்த்த எதிரிகள் தினேஷ், ராஜதுரை ஆகிய இருவரும் மகாலிங்கத்தின் கழுத்து, தலை ஆகிய உறுப்புகளில் மாறிமாறி வெட்டினார்கள் என்றும் நாங்கள் தடுத்து பார்த்தோம் என்றும் அப்போது எதிரிகள் எங்களை பார்த்து நீங்கள் அருகில் வந்தால் உங்களையும் வெட்டுவோம் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எனது வீட்டருகே நின்று பார்த்தபோது காசிநாதன் அவரது மனைவி ஜானகி, மகன் தர்மலிங்கம் ஆகியோர் வெட்டுபட்டு கிடந்தார்கள் என்றும் ஜானகி மட்டும் உயிர் பிழைத்துக்-கொண்டார் என்றும் மற்ற இருவரும் இறந்துவிட்டனர் என்றும் தர்மலிங்கத்தின் உடலில் தலை இல்லை என்றும் தலையை எடுத்துக்-கொண்டு சென்று அருகிலிருந்த காளியம்மன் கோவில் சூலாயுதத்தில் குத்தி வைத்திருந்தார்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் பழனிவேல் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் சம்பவதினத்தன்று காலை 9.00 மணியளவில் கோதுமை அரைப்பதற்காக எனது வீட்டிலிருந்து புறப்பட்டு வண்ணாங்குளத்தை தாண்டி கிழக்கு பக்கமாக உள்ள ரைஸ் மில்லிற்கு சென்றேன் என்றும் கோதுமை அரைப்பதற்கு தாமதம் ஆகும் என்று தெரியவந்ததால் வீட்டிற்கு சென்று சாப்பிட்டு வரலாம் என்று முடிவு செய்து நான் எனது வீட்டிற்கு திரும்ப வந்துகொண்டிருந்தேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் அவர் வீட்டிற்கு வந்ததாகவும் அப்போது ஊர்காரர்கள்

அவரிடம் உன் தம்பி பாரிவள்ளல் மகன் பிரபுவை வெட்டிவிட்டார்கள் என்று சொன்னதாகவும் நான் அலறியடித்துக்கொண்டு சென்று பார்த்த-தாகவும் குறிப்பாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

சான்றாளர் ஜெயா புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் கடந்த 16.05.2008 ஆம் தேதியன்று காலை 10.00 மணியளவில் மல்லிகா என்பவர் வீட்டிற்கு வேலை கேட்பதற்காக போய் இருந்தேன் என்றும் அவரது வீட்டு வாசலில் சிமெண்ட் சாலை இருந்தது என்றும் அப்போது அங்கு மல்லிகாவும் இறந்துபோன பிரபுவின் தாயார் பானுமதியும் அங்கு இருந்தார் என்றும் அப்போது பால்சாமி வீட்டு சந்திலிருந்து எதிரிகள் பழனிசாமியும் பிரபாகரனும் கத்தியை எடுத்துக்கொண்டு வந்தார்கள் என்றும் எதிரி பழனிசாமி பிரபுவை ஒரே வெட்டாக வெட்டிவிட்டார் என்றும் எதிரி பிரபாகரன் பிரபுவை வெட்டினார் என்றும் பிரபு அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்துவிட்டார் என்றும் எதிரி பழனிசாமி பிரபுவின் கழுத்தை அறுத்து தலையை துண்டாக எடுத்துவிட்டார் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நாங்கள் பயந்துகொண்டிருந்தோம் என்றும் எதிரிகள் திருஞானமும் ரவிசந்திரனும் ராஜலிங்கத்தையும் சுரேசையும் துரத்திக்கொண்டு ஓடினார்கள் என்றும் அங்கே காசிநாதன், ஜானகி, தர்மலிங்கம் ஆகியோர் விழுந்து கிடந்தார்கள் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் பாலு புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் தனது முழு பெயர் பாலுசாமி என்றும் தன்னை பாலு என்று அழைப்பார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பாலுசாமியை விசாரிக்கவே இல்லை என்றும் நான் விசாரித்திருந்தால் அவர் முழு பெயரை

சொல்லியிருப்பார் என்றும் நான் நிகழ்நிலை புகார்தாரர் ராஜலிங்கத்திடம் சான்றாளர்களின் முகவரிகளை மட்டும் வாங்கிக்கொண்டு நாங்களாகவே வாக்குமூலம் எழுதிக்கொண்டோம் என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் பானுமதி புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் நான் சென்று என் மகனை ஏன் கொல்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி பழனிசாமி எனது இடுப்பில் உதைத்து என் இடுப்பை உடைத்துவிட்டார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் அதனால் என்னால் எழுந்து நிற்க முடியவில்லை என்றும் எதிரி பழனிசாமி எனது மகனின் கழுத்தை வெட்டி தலையை காலால் பந்தாடி சாலையில் உருட்டி சென்றார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசிநாதனின் குடல் சரிந்துவிட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் ஜானகி புலனாய்வின்போது சொன்ன வாக்குமூலத்தில் எதிரி தினேஷ் எனது தலைமுடியை அறுத்தார் என்று குறிப்பாக சொல்ல-வில்லை என்றால் சரிதான். அதேபோல் இந்த சம்பவத்திற்கு முன்பாக எதிரிகள் தனது வீட்டை தீ வைத்து கொளுத்தியதாகவோ சூரையாடிய-தாகவோ ஆடு மாடுகளை பிடித்து சென்றதாகவோ அந்த சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவோ கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரிகள் 18 பேர் தன்னை தாக்கியதாக சொல்ல-வில்லை என்றால் சரிதான். அதேபோல் எனது மகன் மகாலிங்கம் எதிரிகள் அவரை துரத்தியபோது எங்களை பார்த்து அப்பா, அண்ணா, அம்மா தப்பித்து ஓடிவிடுங்கள் என்று கத்தியதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் என் மகன்கள் ராஜலிங்கமும்

அமிர்தலிங்கமும் தப்பித்து ஓடிவிட்டார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ஜானகியை விசாரிக்கவும் இல்லை வாக்குமூலம் பதிவு செய்யவும் இல்லை என்றால் சரியல்ல.

சான்றாளர் முருகானந்தம் புலனாய்வின்போது அளித்த வாக்கு-மூலத்தில் நானும் அருளும் சம்பவத்தினத்தன்று தர்மலிங்கம் வீட்டிற்கு சாப்பாட்டிற்கு அரிசி கொண்டு சென்றதாகவும் அப்போது ஜானகி அவரிடம் தனது மகன்கள் குளிப்பதற்காக சென்றுள்ளதாகவும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார்கள் என்று சொன்னதாகவும் சாப்பிட்டுவிட்டு போகும்படி சொன்னதாகவும் கிழக்கு பக்கத்திலிருந்து சத்தம் கேட்டதாகவும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் ராஜலிங்கம் ஓடிவந்து எனது பெரியப்பா துரைசெல்வம் வீட்டிற்குள் நுழைந்துவிட்டார் என்றும் அப்போது தர்மலிங்கம் அவரது வீட்டிலிருந்து வெளியே வந்தார் என்றும் அப்போது எதிரிகள் சக்திவேல் மகன் ரமேஷ், பாஸ்கரன் ஆகிய இருவரும் தர்மலிங்கத்தை பூராசாமி கடையின் முன்புறம் வைத்து வெட்டியதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் காசிநாதன் எதிரிகளை பார்த்து கையெடுத்து கும்பிட்டார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சம்பவத்தை பார்த்து பயந்துகொண்டு நாங்கள் ஓடிவிட்டோம் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் பாபு புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் சம்பவ சமயத்தில் பள்ளியில் 7-ஆம் வகுப்பு படித்துக்கொண்டிருந்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் தேசிங்குபாலன் இறந்த அன்றே எனது வீடு சூரையாடப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை

என்றால் சரிதான். அதேபோல் எதிரிகள் அவரது வீட்டை சூரையாடியதாகவும் அவருடைய ஆடு மாடுகளை பிடித்துக்கொண்டு சென்று விருந்து போட்டதாகவும் குறிப்பாக சொல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான். வழக்குச் சம்பவத்தை பார்த்து பதுங்கி கொண்டதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் 16.05.2008 ஆம் தேதியன்று நானும் செல்லப்பனும் மாங்காய் பறிப்பதற்காக ஊருக்கு வெளியே இருக்கும் வாய்க்காலுக்கு சென்றதாகவும் நாங்கள் திரும்பி வந்து கொண்டிருந்தபோது காலை 9.00 முதல் 9.30 மணிக்குள் வெட்டுங்கடா வெட்டுங்கடா என்று சத்தம் கேட்டதாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரி தினேஷ் மகாலிங்கத்தின் வலது பக்க முகத்திலும் வலது தோள்பட்டையிலும் வெட்டினார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் எதிரிகள் ராஜதுரையும் தினேசும் மகாலிங்கத்தை சரமாரியாக வெட்டினார்கள் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் வேலாயுதம் மற்றும் பூராசாமி வீட்டின் வாசலில் தர்மலிங்கத்தின் உடல் தலை இல்லாமல் கிடந்தது என்றும் அதை நான் பார்த்தேன் என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் அந்த இடத்திலிருந்து சுமார் 2 அடி தூரத்தில் காசிநாதன் குடல் சரிந்து இறந்துகிடந்தார் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் தர்மலிங்கத்தின் தலை எங்கே இருக்கிறது என்று பார்த்தபோது அது காளியம்மன் கோவில் சூலத்தில் குத்தப்பட்டிருந்தது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் **சரியல்ல.** அதேபோல் தபால் அலுவலகம் அருகில் இருவர் இறந்து கிடந்தனர் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் பாலுசாமி மற்றும் தினேஷ் வீட்டிற்கு எதிர்புறம் பிரபுவின் உடல் கிடந்தது என்று குறிப்பாக

சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் மருத்துவர் கந்தசாமி புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் ஆயுதங்களை காட்டி நான் விசாரித்ததாகவும் அந்த ஆயுதங்களால் இறந்துபோன நபர்களுக்கு காணப்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் மருத்துவர் ரவிசங்கர் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் ஆயுதங்களை காட்டி நான் விசாரித்ததாகவும் அந்த ஆயுதங்களால் இறந்துபோன நபர்களுக்கு காணப்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

சான்றாளர் மருத்துவர் மதியழகன் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் ஆயுதங்களை காட்டி நான் விசாரித்ததாகவும் அந்த ஆயுதங்களால் இறந்துபோன நபர்களுக்கு காணப்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் அவர் ஜானகியை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் அனுமதித்து விபத்து தகவல் பதிவேடு பதிவு செய்து முதலுதவி சிகிச்சை அளித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். விபத்து தகவல் பதிவேட்டை அவரிடமிருந்து நான் வாங்கவில்லை என்றால் **சரிதான்.** மருத்துவர் மதியழகன் 16.05.2008 ஆம் தேதியன்று 11.00 மணியளவில் ஜானகியை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து விபத்து பதிவேடு பதிவு செய்தார் என்றும் அதை நான் வாங்கினேன் என்றும் அந்த விபத்து தகவல் பதிவேட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் இந்த வழக்கில் இறந்துபோனவர்கள் சம்மந்தமாக நடந்த சம்பவம் 8.00 மணிக்கும் 8.30 மணிக்கும் நடந்த கலவரத்தில்

இறந்துபோனர்கள் என்று தெரிந்துவிடும் என்பதால் அவற்றை மறைத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை மருத்துவர்களோ தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர்களோ என்னிடம் சொன்ன வாக்குமூலத்தில் அவர்களிடமிருந்து நான் விபத்து தகவல் பதிவேட்டை வாங்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து தகவல் பதிவேட்டை மருத்துவமனையிலிருந்துதான் வாங்குவோம். விபத்து தகவல் பதிவேட்டை எந்த மருத்துவமனையிலிருந்து யாரிடமிருந்து எப்போது வாங்கினோம் என்று காட்ட ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் அவ்வாறு சான்றாளர்கள் யாரும் வாக்குமூலம் அளிக்கவில்லை.

மருத்துவர் பானுமதி புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் ஜானகியை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து விபத்து தகவல் பதிவேடு பதிவு செய்து முதலுதவி சிகிச்சை அளித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். **அ.சா.ஆ-**51 ஆக உள்ள விபத்து தகவல் பதிவேட்டு நகலில் மருத்துவர் பானுமதி 16.05.2008 ஆம் தேதியன்று கையொப்பம் இட்டதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். அந்த விபத்து பதிவேடு மருத்துவர் பானுமதியின் உதவியுடன் பின்னிட்டு புனையப்பட்டது என்றால் சரியல்ல.

மருத்துவர் ஜெயபாலன் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஜானகியை மேல் சிகிச்சைக்கு அனுமதித்து விபத்து தகவல் பதிவேடு பதிவு செய்ததாகவும் அந்த பதிவேட்டை என்னிடம் கொடுத்ததாகவும் சொல்லவில்லை என்றால் **சரியல்ல.**

பிரேதவிசாரணையில் கலந்துகொண்ட பஞ்சாயத்தார்கள் யாரையும் நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச் சம்பவத்தை கண்ணுற்ற சான்றாளர்கள் என்று சான்றாளர் பட்டியலில் சொல்லப்பட்டுள்ள சான்றளர்கள் யாரும் பிரேதவிசாரணை சான்றாளராக இல்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் சான்றாளர்கள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும் பார்வைமகசரும் மாதிரி வரைபடமும் சம்பவ இடத்தில் தயாரிக்க-வில்லை என்றும் வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து புனையப்பட்டன என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் சான்றாளர்களோ வேறு சான்றாளர்ளோ சம்பவ இடத்தை எனக்கு அடையாளம் காட்டியதாக குறிப்பாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

ஐந்து பிரேத விசாரணை அறிக்கையிலும் விசாரணை தொடங்கிய நேரம், முடிந்த நேரம் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். தலை தனியாகவும் உடல் தனியாகவும் இருந்த நிலையில் யாரை வைத்து இந்த தலை இந்த உடலுடையதுதான் என்று அடையாளம் கண்டு பிரேத விசாரணை செய்தேன் என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த உடலுக்கு இந்த தலை என்று நாங்களே பொறுத்தி சடல கூராய்விற்கு அனுப்பினோம் என்றால் சரிதான். உடலோடு தலையை பொறுத்துவது மருத்துவ அறிவியல் சார்ந்தது என்றும் அவர்கள் அதை முடிவு செய்யாமல் நாங்கள் பொறுத்திக்கொடுத்த உடலை வைத்து சடல கூராய்வு செய்து வழங்கிய அறிக்கை ஏற்புடையதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

சூலாயுதத்தில் இருந்த தலையை சூலாயுதத்தில் இருந்து பிரித்ததாக மருத்துவர்கள் யாராவது என்னிடம் சொன்ன வாக்குமூலத்தில் சொல்லி-யுள்ளார்களா என்றால் இல்லை. சூலத்திலிருந்து தலை கீழே விழுந்து-விட்டது. நான் விசாரித்த சான்றாளர்கள் யாரும் என்னிடம் சொன்ன வாக்குமூலத்தில் சூலாயுதத்திலிருந்து தலை கீழே விழுந்துவிட்டதாகவோ அல்லது நான் சூலாயுதத்திலிருந்து தலையை பிரித்து எடுத்ததாகவோ குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மருத்துவர்களை சம்பவ இடத்திற்கு வரவழைத்து சடலகூராய்வு செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கை புலனாய்வு செய்வதற்கு எனக்கு அதிகார தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவர்கள் செய்ய வேண்டிய வேலையை நான் செய்தேன் என்றால் சரியல்ல. அவ்வாறு செய்ய எனக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை என்றால் மருத்துவர்கள் செய்ய வேண்டிய வேலையை நான் செய்யவில்லை.

சான்றாளர் ஜெயந்தி புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் 16.05.2008 ஆம் தேதியன்று காலை 9.00 மணியளவில் நானும் என்பதில் நானும் என்ற வார்த்தை அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ராஜலிங்கத்தின் வாக்குமூலத்தை பார்த்து ஜெயந்தியின் வாக்குமூலத்தையும் எழுதினேன் என்றும் அதனால்தான் நானும் என்ற வார்த்தை அடிக்கப்-பட்டது என்றும் நான் ஜெயந்தியை தனியாக விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் பிரகாஷ் இறந்துபோன பிரபுவின் தம்பியாக இருந்த நிலையில் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் தன்னுடைய

அண்ணன் பிரபு என்று சொல்லாமல் பாரிவள்ளல் மகன் பிரபு என்று சொல்லியிருப்பதே பிரகாஷ் சொல்லி வாக்குமூலம் எழுதப்படவில்லை என்றும் பெயர் முகவரியை வாங்கிகொண்டு வழக்கிற்கேற்றவாறு நாங்களே வாக்குமூலங்களை எழுதிக்கொண்டதை காட்டுகிறது என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் ஜோதிவேல் புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் அவருடைய வயதை குறிப்பிடாமல் 2008 என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே அவரை விசாரித்திருந்தால் அவருடைய வயதை குறிப்பிட்டிருப்பேன் என்றும் அவரை விசாரிக்காமல் நாங்களாகவே எழுதிக்கொண்டதால்தான் அவ்வாறு விடுபட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் கோபி புலனாய்வின்போது அளித்த வாக்குமூலத்தில் கூலிவேலை செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் வழக்கு சம்பவம் நடந்த காலகட்டத்தில் பள்ளியில் படித்ததாக சொல்லியுள்ளார் என்றும் உண்மையிலேயே அவரை விசாரித்திருந்தால் அவர் படித்ததை குறிப்பிட்டு இருப்பேன் என்றும் அவரை விசாரிக்காமல் நாங்களாகவே எழுதிக் கொண்டதால்தான் கூலிவேலை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் சரோஜாவின் கணவர் பெயர் நடராஜன் என்றால் சரிதான். அவர் புலனாய்வின்போது அளித்ததாக சொல்லப்படும் வாக்குமூலத்தில் நானும் நடராஜன் மனைவி சரோஜா, .. என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதிலிருந்து உண்மையிலேயே சரோஜாவை நான் விசாரிக்க-

வில்லை என்பதும் வேறொரு சான்றாளருக்காக எழுதப்பட்ட வாக்குமூலத்தை அப்படியே சரோஜாவிற்கும் எழுதிக்கொண்டதால்தான் அவ்வாறு வாசகம் உள்ளது என்றால் சரியல்ல.

சான்றாளர் சுபாஷ் தந்தை பெயர் கொளஞ்சியின் வாக்குமூலத்தில் அவருடைய வயது 14 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் கூலிவேலை செய்து ஜீவனம் செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் உண்மையிலேயே அந்த சமயத்தில் பள்ளிக்கூடம் படித்ததாக சாட்சியத்தில் சொல்லியுள்ளார் என்றும் உண்மையிலேயே அவரை விசாரித்திருந்தால் அவர் பள்ளிக்கூடம் படித்ததை குறிப்பிட்டி-ருப்பேன் என்றும் அவரை விசாரிக்காமல் நாங்களாகவே எழுதிக்-கொண்டதால்தான் கூலி வேலை செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் பத்மநாபன் மகன் முருகானந்தம் வாக்குமூலத்தில் காலை 10.00 மணியளவில் நானும் கொளஞ்சி மகன் சுபாசும் பத்மநாபன் மகன் முருகானந்தமும் எனது பாட்டி ஜானகி வீட்டு திண்ணையில்... என்று உள்ளது என்றால் சரிதான். இந்த வாக்குமூலமும் வேறு ஒருவருக்கு பதிவு செய்த வாக்குமூலத்தை தழுவி அப்படியே எழுதப்பட்டது என்றும் உண்மையிலேயே முருகானந்தத்தை விசாரித்து எழுதவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சான்றாளர் கொளஞ்சி மகன் பாபுவின் வாக்குமூலத்தில் அவருடைய வயது 15 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் கூலிவேலை செய்து ஜீவனம் செய்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவர் உண்மையிலேயே அந்த சமயத்தில் பள்ளிக்கூடம் படித்ததாக சாட்சியத்தில்

சொல்லியுள்ளார் என்றும் உண்மையிலேயே அவரை விசாரித்திருந்தால் அவர் பள்ளிக்கூடம் படித்ததை குறிப்பிட்டிருப்பேன் என்றும் அவரை விசாரிக்காமல் நாங்களாகவே எழுதிக்கொண்டதால்தான் கூலி வேலை செய்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**அ.சா.ஆ-77** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட சொத்தின் விவரம் என்பதில் 13-1/2 என்று எழுதப்பட்டு ½ அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மேலொப்பம் செய்துள்ளேன்.

**அ.சா.ஆ-75** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட சொத்தின் விவரம் என்பதில் அளவுகள் இரண்டும் திருத்தப்பட்டிருக்கிறது என்றும் சுருக்கொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

**அ.சா.ஆ-76** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்ட சொத்தின் விவரம் என்பதில் அளவுகள் இரண்டும் திருத்தப்பட்டிருக்கிறது என்றும் சுருக்கொப்பம் இல்லை என்றும் சொன்னால் சரிதான்.

**அ.சா.ஆ-84** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிய தடயங்களின் விவரம் என்பது வேறு கையெழுத்திலும் அதிலுள்ள விவரங்கள் வேறு கையெழுத்திலும் உள்ளன என்றால் சரிதான்.

**அ.சா.ஆ-64** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிய தடயங்களின் விவரம் என்பது வேறு கையெழுத்திலும் அதிலுள்ள விவரங்கள் வேறு கையெழுத்திலும் உள்ளன என்றால் சரிதான்.

**அ.சா.ஆ-88** கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றிய தடயங்களின் விவரம் என்பது வேறு கையெழுத்திலும் அதிலுள்ள விவரங்கள் வேறு கையெழுத்திலும் மையிலும் உள்ளன என்றால் சரிதான்.

நான் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் மேற்சொன்ன ஆவணங்களை தயாரித்திருந்தால் மேற்சொன்ன குறைபாடுகள் இருந்திருக்காது என்றும் கிடைத்த ஆயுதங்களை வைத்து பொய்யாக விவரங்கள் எழுதியதால்தான் அவ்வாறு குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன என்றும் உண்மை சங்கதிகளை மறைத்து ஆவணங்களை எழுதியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் எந்த சான்றாளரையும் நேரடியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை சட்டமுறைப்படி புலனாய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்து போனவர்களுக்கும் எதிரிகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

தேசிங்குபாலன் இறந்த வழக்கில் எதிரிகள் சான்றாளராக இருந்த ஒரே காரணத்திற்காக கலவரத்தில் இறந்துபோனவர்களை எதிரிகள்தான் கொன்றார்கள் என்று பொய்யாக அவர்களை இந்த வழக்கில் இணைத்-துள்ளேன் என்றால் சரியல்ல. கலவரத்தை மாற்றி முன்விரோத கொலை வழக்காக சித்தரித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் குற்றம் எதுவும் புரியவில்லை என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.